03.11.2019

18.11.2018ல் நடைபெற்ற 2018ம் ஆண்டுக்கான பொது அமர்வின் தொகுப்பு:

ஞாயிறு திருப்பலியின் பின்பு நடைபெற்ற அமர்வில் 32 அங்கத்தவர்கள் கலந்து கொண்டார்கள்.

1. செயலாளரினால் கடந்த ஆண்டுக்குரிய அறிக்கை, பொது அமர்வு நடைபெறாததினால் சமர்பிக்கப்படவில்லை. அதற்கான காரணங்களும், கடந்த வருட செயற்பாடுகளும் எடுத்துரைக்கப்பட்டன.

2. பொருளாளரின் 2018ம் ஆண்டுக்கான வருடாந்த கணக்கறிக்கை சமர்பிக்கப்பட்டது. தற்போதைய கையிருப்பு, 10 278NOK. அதிக அங்கத்தவர்கள் நிலுவையான சந்தாப்பணத்தை செலுத்தியுள்ளார்கள்.

3. 2018ம் ஆண்டின் செயற்பாடுகள் குறித்து தலைவரின் உரை இடம்பெற்றது.

4. நிர்வாக அங்கத்தவர்களின்(6) பணிக்காலமான மூன்று வருடங்கள் நிறைவடைந்தமையும், அன்ரன் அருள்ராஜ், ஜேம்ஸ் அன்ரனிப்பிள்ளை, ஜெரமி மரியநாயகம் ஆகியோர் நிர்வாகப் பணியிலிருந்து ஓய்வு பெற்றமையும் அறிவிக்கப்பட்டது. இவர்களது பணிக்காக, வழிபாடு - இராக்கினி முரளிதரன், பொருளாளர் - செபஸ்ரியன் தோமஸ் ஆகியோர் நிர்வாகத்தில் இணைந்தனர்.

5. **Kirkekafe**
   திருப்பலிக்கு வருகைதரும் அனேகமான அங்கத்தவர்கள் தேனீர் அனுசரணையில், குடும்பமாக பங்களிப்பு செய்கின்றார்கள். புதிய அங்கத்தவர்களை இணைப்பதுவென முடிவானது.

6. **அமல அன்னை அன்பகம்:**
   இச் சிறுவர் காப்பகத்தின் தற்போதைய நிலை குறித்தும், தாயகத்திற்கு எம்மால் உதவக்கூடிய மாற்று திட்டம் பற்றி பரிசீலிப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

7. **மரியன்னையின் திருவிழா / இல்லச் சந்திப்பு:**
   மரியன்னையின் திருச் சுரூபம், நிர்வாகத்திற்கு அறிவிக்காமல் அட்டவணையில் இல்லாத இல்லங்களுக்கு கையளிக்க வேண்டாம் எனக் கோரப்பட்டது.

   திருவிழாவின் முதல்நாள் வெள்ளி மாலை நற்கருணை ஆராதனை வழிபாடு நடாத்த அங்கத்தவர்கள் இணக்கம் தெரிவித்தார்கள். இவ் வருடவிழாவிற்கு திரு. ஜேம்ஸ் ஸ்ரனிஸ்லோஸ், திரு. இராஜேஸ்வரன் பொறுப்பாளர்களாக இருப்பார்கள் என அறிவிக்கப்பட்டது.

8. பாடகர் குழாம்:
   Keyboard இசைப்பதற்கு டயனா, மெலானி பொறுப்பாக இருப்பார்கள்.

9. ஒளிவிழா:
   வளப்பற்றாக்குறை காரணமாக தற்போதைக்கு நடாத்துவதில்லை என முடிவானது.

அன்பியத்தின் காப்பாளர் அருட்பணி ஜெயந்தன் அடிகளின் கருத்துக்களுடன், பொது அமர்வு நிறைவுற்றது.

மகேந்திரன் தியோபிலஸ்
செயலாளர்
03.11.2019